DEPOSITION OF WITNESS.<br>(Chapter XXV, B.N.S.S)<br>IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.268/2025
Deposition of DW2

| | | |
|---|---|---|
| Name | : | திரு.தர்மர் |
| Father's / Husband Name | : | பொன்னையா |
| Village | : | போடி |
| Taluk | : | போடி |
| Calling | : | |
| Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of June 2026.

புகார்தாரர் ஆஜர் இல்லை. BNSS 279ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

1. புகார்தாரரை எனக்கு தெரியாது. எதிரியை எனக்கு தெரியும். கந்துவட்டி கனி வழக்கறிஞருக்கும், கண்ணபிரானுக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்தது. ஏலக்காய் மார்க்கெட்டில் நான் நின்று கொண்டிருந்த போது வழக்கறிஞர் கனிக்கும், எதிரிக்கும் தகராறு நடந்தது நான் என்ன என்று விசாரித்த போது இருவருக்கும் இடையே இருந்த கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டதாக தெரியவந்தது. வழக்கறிஞர் கனியிடம் வாங்கிய இரண்டு லட்சத்தை எதிரி வட்டி மற்றும் அசலை திருப்பி கொடுத்துவிட்டார். கந்து வட்டி கனி மேற்படி ஒரு லட்சம் வட்டி வேண்டும் என்று கேட்டார். நான் இருவரிடம் சமரசம் பேசி அறுபதாயிரம் எதிரியிடமிருந்து பெற்று கனியிடம் கொடுத்தேன். பின்பு பத்து நாட்கள் கழித்து கனி எதிரியின் வாகனத்தை அடித்து புடுங்கி சென்றுள்ளார். அப்போது காவல் நிலையம் சென்று எதிரி புகார் கொடுத்துவிட்டு என்னிடம்

அந்த தகவலை கூறினார். காவல் ஆய்வாளர் கனிக்கு போன் செய்து வரும்படி கூறி பேசி வாகனத்தை திருப்பி பெற்று எதிரியிடம் தந்தார்.

2. கனி என்பவர் பாலமுருகன் மூலம் எதிரி மீது காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு சம்பந்தமாக கனி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். கனி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் எ.சா.ஆ.1 ஆகும்.**

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

கனிக்கும், எதிரிக்கும் இருந்ததாக சொல்லப்படும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியும் என்றால் தெரியாது. ஏலக்காய் மார்க்கெட்டில் கனிக்கும் எதிரிக்கும் இடையே பிரச்சனை நடந்ததாக சொல்லப்படும் விபரத்தை குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, பிரச்சனை என் முன்னிலையில்தான் நடந்தது.அந்த பிரச்சனை சம்பந்தமாக எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்ற விவரம் நேரடியாக தெரியும் என்றால் தெரியாது.எதிரி கனியிடம் ரூபாய் 2 லட்சம் கொடுத்து விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கனி எதிரியின் வாகனத்தை அடித்து புடுங்கியதாக சொல்லப்படும் விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அது சம்பந்தமாக எதிரி கனிமீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கனிக்கும், எதிரிக்கும் நேரடியாக கொடுக்கல் வாங்கல் இல்லை என்றும் எதிரிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சிஅளிக்கிறேன் என்றால் சரியல்ல.எதிரி பாலமுருகனிடம் வாங்கிய பணத்தை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் அவருக்காக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.12 17:25:46 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam